# மருத்துவ பட்டமேற்படிப்பு நிறுவனம்
# (PGIM)
# கொழும்பு பல்கலைக்கழகம்

## பதவி: செய்நிரலாளர் மற்றும் முறைமைப் பகுப்பாய்வாளர் (Programmer Cum Systems Analyst) - தரம் II

கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டமேற்படிப்பு நிறுவனமானது, தகுதியான இலங்கை பிரஜைகளிடமிருந்து செய்நிரலாளர் மற்றும் முறைமைப் பகுப்பாய்வாளர் - தரம் II பதவிக்காக 06.02.2026 திகதி வரை விண்ணப்பங்களைக் கோருகின்றது.

### செய்நிரலாளர் மற்றும் முறைமைப் பகுப்பாய்வாளர் தரம் II – 01 பதவி

**சம்பளக் குறியீடு : (U-AS-2 (II))**

**சம்பள அளவுத்திட்டம்: ரூ. 85,305 - 3 x 2,400 - 92,505(EB) 94,905 - 14 x 2,400 - 128,505 மாதத்திற்கு (01.01.2025 இன் படி)**

**ஏனைய நன்மைகள்:**

- வாழ்க்கைச் செலவுப் படி ரூ. 17,800.00.
- செய்நிரலாளர் மற்றும் முறைமைப் பகுப்பாய்வாளர் - தரம் II பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகள், 04.04.2025 திகதியிட்ட ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 02/2025(i) இற்கு அமையத் தெரிவு செய்யப்படும் வேட்பாளருக்கு வழங்கப்படும்.
- வேலை தருநரால் 3% ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF).
- ஊழியரால் சம்பளத்தின் 10% மற்றும் வேலை தருநரால் 7% பல்கலைக்கழக சேமிப்பு நிதியத்திற்கு (UPF) வரவு வைக்கப்படும்.
- வேலை தருநரால் சம்பளத்தின் 8% ஓய்வூதிய நிதியத்திற்கு வரவு வைக்கப்படும்.

விண்ணப்பப் படிவங்கள் மற்றும் ஏனைய விபரங்களை நிறுவனத்தின் இணையதளத்திலிருந்து (https://pgim.cmb.ac.lk/) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் recruitment@pgim.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும் அல்லது சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தாபன மற்றும் பொது நிர்வாகக் கிளை (மருத்துவ பட்டமேற்படிப்பு நிறுவனம், இல: 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை, கொழும்பு 07) எனும் முகவரிக்கு 06.02.2026 அன்று அல்லது அதற்கு முன்னதாகக் கையில் ஒப்படைக்கப்படவோ அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படவோ வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவியின் பெயரை மின்னஞ்சலின் விடயப் பகுதியிலோ (Subject) அல்லது கடித உறையின் இடது பக்க மேல் மூலையிலோ குறிப்பிட வேண்டும்.

உயர்கல்வி நிறுவனங்கள், அரச திணைக்களங்கள் மற்றும் அரசக் கூட்டுத்தாபனங்களில் பணியாற்றுபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்ப வேண்டும். இத் தேவைப்பாட்டிற்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அல்லது தகைமைகள் மற்றும் அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் சமர்ப்பிப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் மறுபரிசீலனை செய்யப்பட மாட்டாது.

**பணிப்பாளர்**
**மருத்துவ பட்டமேற்படிப்பு நிறுவனம்**
**இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை, கொழும்பு - 07.**
**18.01.2026**